# நோயாளி தகவல் கையேடு

## [LIRAGLUTIDE]

### இந்த மருந்து எதற்கானது?

Liraglutide நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படுகிறது. இது உங்களது உணவு நாட்டத்தைக் குறைத்து, நீங்கள் உண்ணும் உணவுக்கு உங்கள் உடல் உற்பத்தி செய்யும் இன்சுலினின் அளவை அதிகரிக்கும். குறிப்பிட்ட சிலருக்கு, எடையைக் குறைப்பதற்கும் இதைப் பயன்படுத்தலாம்.

### இந்த மருந்தை நான் எப்படி உட்கொள்ளவேண்டும் / பயன்படுத்தவேண்டும்?

உங்களது மேல் கை, தொடை அல்லது வயிற்றுப்பகுதியில், தோலுக்கும் தசைக்கும் இடையிலுள்ள கொழுப்புத் திசுவில் Liraglutide மருந்தை ஊசிவழி ஏற்றவேண்டும். இதை இரத்த நாளத்திற்குள் அல்லது தசைக்குள் ஏற்றக்கூடாது. உங்கள் மருத்துவர், தாதி அல்லது மருந்தாளர் சொன்ன அளவில் மருந்தை ஏற்றுங்கள். இந்த மருந்தை ஊசிவழி ஏற்றும் வழிமுறையை, மருந்தின் தகவல் கையேட்டில் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

### இந்த மருந்தை நான் உட்கொள்ள / பயன்படுத்த மறந்துவிட்டால் என்ன செய்வது?

நீங்கள் ஒரு வேளைக்கான மருந்தை மறந்துவிட்டால், நினைவுக்கு வந்தவுடன் ஊசி குத்திவிடுங்கள். ஆனால், இந்த மருந்தை ஊசிவழி ஏற்றவேண்டிய நேரத்தைத் தவறவிட்டு 12 மணிநேரத்திற்கு மேலாகிவிட்டால், அந்த வேளைக்கான மருந்தை ஏற்றவேண்டாம். மறுநாள் வழக்கம்போல, அடுத்த வேளைக்கான மருந்தை ஊசிவழி ஏற்றுங்கள்.

மறந்துபோன மருந்தை ஈடுசெய்ய, மறுநாள் கூடுதல் மருந்தை ஏற்றிக் கொள்ளாதீர்கள்.

### நான் என்னென்ன முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்?

பின்வருவன உங்களுக்குப் பொருந்தினால், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் தெரியப்படுத்துங்கள்:

- இந்த மருந்துக்கு அல்லது இந்த மருந்திலுள்ள மற்ற உட்பொருட்களுக்கு ஒவ்வாமை இருக்கிறது
- நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்கள், கருவுறத் திட்டமிடுகிறீர்கள், அல்லது தாய்ப்பால் ஊட்டுகிறீர்கள்
- உங்களுக்கு இதயத்தில், சிறுநீரில் அல்லது கல்லீரலில் பிரச்சினைகள் உள்ளன
- வயிறு அல்லது குடல் பிரச்சினைகள், கேஸ்ட்ரோபரிசிஸ் (வயிறு காலியாவது தாமதமடையும் பிரச்சினை) அல்லது குடல் அழற்சி நோய் இருக்கிறது
- தைராய்ட் புற்றுநோய் இருக்கிறது

உங்களுக்கு வகை 1 நீரிழிவு நோய் (உங்கள் உடல் இன்சுலினை உற்பத்தி செய்யவில்லை) அல்லது நீரிழிவு கீட்டோஅசிடோசிஸ் (இரத்தத்தில் அல்லது சிறுநீரில் கீட்டோன்கள் அதிகரிப்பு) இருந்தால், இந்த மருந்தைப் பயன்படுத்தக்கூடாது. நீரிழிவு கீட்டோஅசிடோசிஸ் என்பது நீரிழிவு நோயினால் ஏற்படும் ஒரு பிரச்சினை. உங்கள் இரத்தத்தில் அல்லது சிறுநீரில் கீட்டோன்களின் அதிகரிப்பால், இரத்தத்தில் அமிலத்தன்மை கூடும்போது

இப்பிரச்சினை ஏற்படுகிறது. நீரிழிவு கீட்டோஅசிடோசிஸ் பிரச்சினையின் அறிகுறிகளில் உள்ளடங்குவன:

- அதிகமாகச் சிறுநீர் கழிப்பு
- தாகம்
- உடல்நலக்குறைவு, குமட்டல் அல்லது வாந்தி
- தலைசுற்றல் அல்லது அசதி
- வயிற்று வலி
- முகம் சிவப்பேறுதல்
- உங்கள் சுவாசத்தில் இனிப்பான பழ வாசம்

மேற்காணும் அறிகுறிகள் உங்களுக்கு இருந்தால், நீங்கள் உடனடியாக மருத்துவரைப் பார்க்கச் செல்லவேண்டும்.

இந்த மருந்து இன்சுலினுக்கான மாற்று மருந்தல்ல.

## இந்த மருந்தின் பொதுவான பக்கவிளைவுகள் என்ன?

எல்லா மருந்துகளையும் போலவே, இந்த மருந்தும் சில உத்தேசப் பக்கவிளைவுகளை ஏற்படுத்தலாம். ஆனால், எல்லோருக்கும் பக்கவிளைவுகள் ஏற்படுவதில்லை. பக்கவிளைவுகளில் ஏதாவது கடுமையாகி தொல்லை கொடுத்தால், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் ஆலோசனை நாடுங்கள்.

Liraglutide மருந்தின் பொதுவான பக்கவிளைவுகளில் உள்ளடங்குவன:

- குமட்டல், வாந்தி, வயிற்றில் அசௌகரியம்
    - குமட்டலையும் வாந்தியையும் குறைக்க, மருந்தைச் சாப்பாட்டுடன் அல்லது சாப்பாட்டுக்குப் பிறகு ஊசிவழி ஏற்றுங்கள்
    - கொழுப்புமிக்க, காரமான அல்லது மிகுந்த வாடை உள்ள உணவு வகைகளைத் தவிர்த்திடுங்கள்
- வயிற்றுப்போக்கு / மலச்சிக்கல்
- குறைவான பசி
- ஊசி குத்திய இடத்தில் சிராய்ப்பு, வலி, எரிச்சல், அரிப்பு மற்றும் சொறி
- Liraglutide மருந்தை சல்ஃபோனிலூரியாஸ் (எ.கா. Glipizide அல்லது Gliclazide) போன்ற மற்ற நீரிழிவு மருந்துகளோடும் இன்சுலினோடும் சேர்த்து பயன்படுத்தும்போது இரத்தச் சர்க்கரை குறைவு ஏற்படுதல்

இந்த மருந்து இரத்தச் சர்க்கரை குறைவை (ஹைபோகிளய்சீமியா) ஏற்படுத்தலாம். இரத்தச் சர்க்கரை குறைவின் அறிகுறிகளில் உள்ளடங்குவன:

- பலவீனம்
- தலைசுற்றல்
- பசி
- வியர்த்தல்
- நடுநடுங்குதல்
- மங்கலான பார்வை
- நடையில் தடுமாற்றம்
- வேகமான இதயத்துடிப்பு

இரத்தச் சர்க்கரை குறைவின் அறிகுறிகளில் ஏதேனும் ஏற்பட்டால், உடனடியாகப் பின்வருமாறு செய்யுங்கள்:

செயல் 1: வீட்டில் இரத்தச் சர்க்கரை மீட்டர் (குளுக்கோமீட்டர்) இருந்தால், உங்கள் இரத்தச் சர்க்கரை அளவைப் பரிசோதித்துப் பாருங்கள். இரத்தச் சர்க்கரை 4 mmol/L அளவுக்கும் குறைவாக இருந்தால், வேகமாகச் செயல்படும் சர்க்கரை 15 கிராம் உட்கொள்ளுங்கள். வேகமாகச் செயல்படும் சர்க்கரையின் எடுத்துக்காட்டுகள்:

- 3 குளுக்கோஸ் மாத்திரைகள் அல்லது
- பாதி குவளை பழச்சாறு (200 மில்லிலீட்டர்) அல்லது
- பாதி டின் மென்பானம் அல்லது இனிப்பான பானம் (175 மில்லிலீட்டர்) அல்லது
- 1 கேன் குறைவான சர்க்கரை குளிர்பானம் (330 மில்லிலிட்டர்கள்) அல்லது
- 3 தேக்கரண்டி சர்க்கரை, தேன் அல்லது சீனிப்பாகு

செயல் 2: உங்களை 15 நிமிடம் கண்காணித்திடுங்கள். உங்களிடம் குளுக்கோமீட்டர் (இரத்தச் சர்க்கரை மீட்டர்) இருந்தால், 15 நிமிடத்திற்குப் பிறகு இரத்தச் சர்க்கரை அளவை மறுபடியும் பரிசோதித்துப் பாருங்கள்.

செயல் 3: உங்கள் இரத்தச் சர்க்கரை 4 mmol/L அளவுக்கும் குறைவாகவே இருந்தால், அல்லது இரத்தச் சர்க்கரை குறைவின் அறிகுறிகள் நீடித்தால், நீங்கள் செயல் 1ல் உள்ளபடி மேலும் 15 கிராம் சர்க்கரை உட்கொள்ளவேண்டும்.

இதற்குப் பிறகும் அறிகுறிகள் நீங்காவிட்டால், உடனடியாக மருத்துவரிடம் அல்லது மருத்துவமனைக்குச் செல்லுங்கள்.

செயல் 4: வேகமாகச் செயல்படும் சர்க்கரையை முன்னதாக உட்கொண்ட பிறகு, இரத்தச் சர்க்கரை 4 mmol/L அளவில் அல்லது அதற்குமேல் இருந்தால், சாப்பாட்டை அல்லது தின்பண்டத்தைச் சாப்பிடுங்கள்.

## நான் உடனடியாக மருத்துவக் கவனிப்பு நாடவேண்டிய அரிய, ஆனால் கடுமையான பக்கவிளைவுகள் என்ன?

மருந்து ஒவ்வாமையின் அறிகுறிகளில் பின்வருபவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை உள்ளடங்கும்:

- முகத்தில் / கண்களில் / உதடுகளில் / நாக்கில் வீக்கம்
- மூச்சுத்திணறல்
- உடலெங்கும் தோல் அரிப்பு

இந்த அறிகுறிகள் ஏதேனும் உங்களுக்கு ஏற்பட்டால், நீங்கள் உடனடியாக மருந்தை நிறுத்திவிட்டு, உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரைப் பார்க்கச் செல்லவேண்டும் .

பின்வரும் கடுமையான பக்கவிளைவுகள் நேர்ந்தால், நீங்கள் உடனடியாக உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரைப் பார்க்கச் செல்லவேண்டும்:

- இந்த மருந்தின் அரிய, ஆனால் கடுமையான ஒரு பக்கவிளைவு கணைய அழற்சி (கணைய வீக்கம்). அதன் அறிகுறிகளில் உள்ளடங்குவன:
    - வயிற்றில், வயிற்றுப்பகுதியில் அல்லது முதுகில் கடுமையான வலி
    - குமட்டல் அல்லது நீங்காத வாந்தி
    - காய்ச்சல்

## இந்த மருந்தை நான் உட்கொள்ளும்போது / பயன்படுத்தும்போது எந்தெந்த உணவை அல்லது மருந்தைத் தவிர்க்கவேண்டும்?

இந்த மருந்தை எடுத்துக்கொள்ளும் வேளையில் மது அருந்துவதைத் தவிர்க்கவேண்டும். ஏனென்றால், இரத்தச் சர்க்கரை குறைவு ஏற்படக்கூடிய அபாயம் அதிகரிக்கலாம்.

## இந்த மருந்தை நான் எப்படி பத்திரப்படுத்தி வைக்கவேண்டும்?

திறக்கப்படாத புதிய மருந்தூசிகள் அனைத்தையும் குளிர்பதனப் பெட்டியில் 2 முதல் 8 டிகிரி செல்சியஸ் குளிரில் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். **உறைய வைக்கக்கூடாது.**

நீங்கள் ஊசிமருந்தைப் பயன்படுத்தத் தொடங்கியவுடன், தொடர்ந்து குளிர்பதனப் பெட்டியில் அல்லது அறை வெப்பநிலையில் (30 டிகிரி செல்சியஸுக்குக் கீழ்) வைத்திருக்கலாம். ஊசிமருந்தை ஒளியிலிருந்து பாதுகாக்க, அதன் மூடியை எப்போதும் மாட்டி வைத்திருங்கள். இந்த மருந்தை பிள்ளைகளின் கைக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள். ஊசிமருந்தைத் திறந்து 4 வாரங்களுக்குப் பிறகு வீசிவிடுங்கள்.

## இந்த மருந்தைப் பாதுகாப்பான முறையில் கையாளுவது எப்படி? (பொருந்துமாயின்)

Liraglutide ஊசிமருந்தைப் பயன்படுத்துமுன், அது தெளிந்தும் நிறமில்லாமலும் / கிட்டத்தட்ட நிறமில்லாமலும் இருப்பதை உறுதி செய்யுங்கள்.

இந்த மருந்து தற்செயலாக உறைந்து போயிருந்தால் பயன்படுத்தவேண்டாம். ஊசிகள் ஊசிமருந்துடன் பயன்படுத்துவதற்குப் பொருத்தமாக இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.

## இந்த மருந்தைப் பாதுகாப்பான முறையில் வீசுவது எப்படி?

இந்த ஊசிமருந்தையும் பயன்படுத்திய ஊசிகளையும் உலோக டின்னில் அல்லது திடமான பிளாஸ்டிக் கலனில் (எ.கா. சலவைத்திரவ போத்தல்கள்) வீசலாம். ஊசிகளால் காயம் ஏற்படுவதைத் தடுக்க, கூரான பொருட்களை வீசுவதற்காகவே வடிவமைக்கப்பட்டிருக்கும் கூர்மை பெட்டியையும் மருந்துக்கடைகளில் நீங்கள் வாங்கலாம்.

## பொறுப்புத்துறப்பு

*மேற்குறிப்பிடப்பட்ட பக்கவிளைவுகள் முழுமையாக ஏற்படக்கூடியவை அல்ல என்பதை கருத்தில் கொள்ளவும்.இம்மருந்தை எடுத்துக் கொள்வதால் தங்களுக்கு ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்பட்டது எனக் கருதினால் தங்களது மருத்துவர் அல்லது மருந்தகரிடம் கலந்து ஆலோசிக்கவும்.*

*பரிந்துரைக்கப்படும் அளவைவிட அதிக மருந்தை நீங்கள் உட்கொண்டால், உடனடியாக மருத்துவக் கவனிப்பு நாடுங்கள். இந்தப் பக்கத்தில் உள்ள தகவல்கள், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடமிருந்து கிடைக்கும் தகவலுக்கு மாற்றாகாது. தயவுசெய்து, மேல்விவரம் அறிய உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் ஆலோசனை நாடுங்கள்.*

*இந்தக் கட்டுரை தேசிய மருந்து தகவல் பணிக்குழு உறுப்பினர்களால் சுகாதார அமைச்சின் ஆதரவோடு உருவாக்கப்பட்டது. இந்தப் பணிக்குழுவில் குழுமப் பங்காளிகள் (தேசிய சுகாதாரப் பராமரிப்புக் குழுமம், தேசியப் பல்கலைக்கழகச் சுகாதாரக் குழுமம், சிங்ஹெல்த்), சமூக மருந்துக்கடைகள் (கார்டியன், யூனிட்டி, வாட்சன்ஸ்), சிங்கப்பூர் மருந்தியல் சங்கம் ஆகியன உள்ளடங்குகின்றன. இந்த உள்ளடக்கம், மருந்துக்கடைகளிலும் சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களிலும் மருந்து கிடைக்குமா என்ற விநியோகத் தகவலைப் பிரதிபலிக்கவில்லை. இத்தகைய தகவலுக்கு, அந்தந்த நிலையங்களிடம் நீங்கள் கேட்டறியலாம்.*